# கால்நடை மூலிகை வைத்தியம் - கையேடு

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து,  மதுரை– 625016
தொலைபேசி : 0452–2380082

SEVA

மார்ச் 2019

© Copyright : SEVA
All rights Reserved.

Compiled by : Mr.P.Vivekanandan, SEVA
Prof.N.Kumaravelu, TANUVAS

Published & Printed by :

**Sustainable-agriculture & Environmental Voluntary Action (SEVA)**

45, T.P.M. Nagar, Virattipathu,
Madurai - 625 010. Tamil Nadu. India.
Ph : 0452-2380082, 2380943
e-mail : vivekseva@gmail.com
web : www.sevango.in

Printed with the support of :
Volunteers in Service to Education in India ( VSEI )

**March 2019**

# பொருளடக்கம்

## கால்நடை மூலிகை வைத்தியம்


| | | |
|---|---|---|
| 1. | மூலிகை மசால் உருண்டை | 1 |
| 2. | வாயு அதிகரிப்பால் ஏற்படும் வயிறு உப்பிசம் | 4 |
| 3. | கழிச்சல் | 5 |
| 4. | மலச்சிக்கல் / வயிறு கட்டுதல் | 6 |
| 5. | குடற்புழுக்கள் | 7 |
| 6. | வெளிப்புற ஒட்டுண்ணிகள் (ஒட்டுண்ணி, பேன்கள், செல்கள்) | 9 |
| 7. | சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் | 10 |
| 8. | காய்ச்சல் | 11 |
| 9. | கோமாரி நோய் | 13 |
| 10. | பால் கறவை மாடுகளில் வரும் மடி நோய் | 16 |
| 11. | சினை தங்காமை / பருவ அறிகுறி தோன்றாமை / கருச்சிதைவு நோய்கள் | 17 |
| 12. | இளங்கொடி விழாதிருத்தல் | 18 |
| 13. | கர்ப்பப்பை வெளித்தள்ளுதல் | 19 |
| 14. | நீல நாக்கு நோய் | 20 |
| 15 | விஷக்கடி அல்லது விஷமுள்ள தீவனம் உண்ட பாதிப்பு | 22 |
| 16. | கண்ணில் ஏற்படும் புண்களுக்கு (கண் நோய்க்கு) | 23 |
| 17. | புண்கள் | 23 |
| 18. | கன்றுகளின் கழிச்சல் நோய் | 24 |
| 19. | கால்நடைகளின் ஆரோக்கியத்திற்கு பஞ்சகவ்யா | 24 |
| 20. | பால் காய்ச்சல் நோய் | 26 |
| 21. | எலும்பு முறிவு | 27 |

22. கொம்பு முறிவு 28
23. படுத்த மாடு எழுந்து நடக்க 29
24. பால் அதிகம் கறக்க 29
25. கோழியினங்களை பாதிக்கும் நோய்கள் 31

# கால்நடை
# மூலிகை வைத்தியம்

## 1. மூலிகை மசால் உருண்டை

ஆடு மாடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையை 1–3 மாத கால இடைவெளியில் கொடுப்பதால் கால்நடைகளுக்கு உண்டாகும் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளான தீவனம் எடுக்காமல் இருத்தல், தண்ணீர் குடிக்காமல் இருத்தல், அசை போடாமல் இருத்தல், வயிறு உப்பிசம், மெலிந்து இருத்தல் போன்றவற்றிற்கும் மற்றும் நோய் வரும் முன் தவிர்ப்பு நடவடிக்கைக்கும் இது உதவும். இதனை தயாரிக்க தேவையான மூலிகை மற்றும் கடைச்சரக்கு பொருட்கள் (5 மாடுகள் அல்லது 12 ஆடுகளுக்கு தேவையானது) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | மிளகு | – 10 கிராம் |
| 2. | சீரகம் | – 10 கிராம் |
| 3. | கொத்தமல்லி விதை | – 20 கிராம் |
| 4. | வெந்தயம் | – 10 கிராம் |
| 5. | ஓமம் | – 10 கிராம் |
| 6. | சுக்கு | – 50 கிராம் |
| 7. | கொம்பு மஞ்சள் | – 50 கிராம் |
| 8. | சோற்றுக் கற்றாழை | – 100 கிராம் |
| 9. | சீந்தில் என்ற அமிர்தவள்ளி (இலை, தண்டு ) | – 100 கிராம் |
| 10. | வெள்ளைப்பூண்டு | – 50 கிராம் |

11. மிளகாய் வத்தல் – 50 கிராம்

12. வெற்றிலை (இலை எண்ணிக்கை) – 10

13. கறிவேப்பிலை – 100 கிராம்

14. துளசி இலை – 50 கிராம்

15. ஆவாரம் (இலை மற்றும் பூக்கள்) – 100 கிராம்

16. வேப்பிலை – 100 கிராம்

17. கொய்யாகொழுந்து –100 கிராம்

18. தேங்காய் துருவல் – 100 கிராம்

19. வெல்லம் – 100 கிராம்

20. கல் உப்பு – 50 கிராம்

21. சமையல் சோடா (ஆப்பசோடா) – 100 கிராம்

மூலிகை மசால் உருண்டை தயாரிக்கும் முறை :

1) முதலில் கடைசரக்குப் பொருட்களான மிளகு, சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், ஓமம், சுக்கு, கொம்பு மஞ்சள், மிளகாய் வத்தல் ஆகியவற்றை இடித்து ஒரு மிக்ஸியில் இட்டு தூள் செய்ய வேண்டும்.

2) புதிதாக கொண்டு வந்த தாவரப் பொருட்களான சோற்றுக் கற்றாழை, கறிவேப்பிலை, வேப்பிலை கொய்யாகொழுந்து, தேங்காய், துளசி, வெள்ளைப் பூண்டு, சீந்தில், ஆவாரை ஆகியவற்றை இடித்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

3) முதலில் தயாரிக்கப்பட்ட கடைச்சரக்கு தூளையும், இரண்டாவதாக இடித்து அரைத்து எடுத்துக் கொண்ட

மூலிகை கலவையையும் சேர்க்க வேண்டும். இத்துடன் தூள் செய்யப்பட்ட வெல்லம், கல் உப்பு மற்றும் ஆப்ப சோடாவையும் நன்றாக கலந்து உருண்டை பிடித்து (எலுமிச்சை பழம் அளவு சுமார் 50 கிராம்) மஞ்சள் தூளில் உருட்டி எடுக்க வேண்டும்.

4) மூலிகை மசால் மருந்து உருண்டையை ஆடு மாடுகளுக்கு வழங்கும் அளவும் முறையும் :

1) வளர்ந்த மாடுகளுக்கு ஓர் உருண்டை வாய் வழியே உள்ளே புகட்ட வேண்டும்.

2) கன்றுகுட்டிகள், செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையினை பாதி அளவாக 25 கிராம் அல்லது ஒவ்வொரு கன்று அல்லது குட்டியின் எடைக்கு ஏற்ப அளவைக் குறைத்து கொடுக்க வேண்டும்.

3) மூலிகை மசால் உருண்டையை தேவைக்குத் தகுந்தபடி மாதம் ஒரு முறை வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும்.

4) உபாதைகள் உள்ள ஆடு மாடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையை தொடர்ந்து 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு வேளை கொடுக்கலாம்.

5) மூலிகை மசால் உருண்டைகளை கொடுப்பதால் கீழ்க்கண்ட பிரச்சனைகளுக்கும் தீர்வாக அமையும்.

- சினை பிடிக்காமை, இனப்பெருக்க பிரச்சனை
- குடற்புழுக்கள்

ஆடுமாடுகளுக்கு நோய் வரும்முன் காப்பாக கீழ்க்கண்ட நோய்களுக்கும் இந்த மூலிகை மசால் கலவை மருந்து பயன்படுத்தி நோய் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

- கோமாரி நோய் (கால்காணை, வாய்காணை )
- நீல நாக்கு நோய்
- காய்ச்சல் (நுண்கிருமிகளால் வரும் காய்ச்சல்)
- மடிநோய்
- தொண்டை அடைப்பான்

## 2) வாயு அதிகரிப்பால் ஏற்படும் வயிறு உப்பிசம்

நோய் அறிகுறிகள் :

மாடு மற்றும் ஆடுகளின் இடது பக்கத்தில் வயிறு பெரிதாக உப்பி வீக்கமாகவும் தோலை அழுத்திக் கொண்டிருக்கும். முன்பக்கம் உள்ள நுரையீரல் பகுதியில் வயிறு உப்பி அழுத்தம் அதிகமாக இருப்பதால் ஆடு, மாடு மூச்சுவிட முடியாமல் பாதிக்கப்படும். வலி அதிகம் ஏற்படும் போது பல்லை நற நற என்று கடிக்கும்.

நோய் காரணங்கள் :

1) தீவனத்தை திடீரென்று மாற்றம் செய்து கொடுப்பது
2) மீதமான சமைத்த உணவுகள் அரிசி சோறு, பொங்கல், கெட்டு போன உணவு முதலியவைகளை கொடுப்பது
3) புரத சத்து தீவன செடிகளான முயல் மசால், வேலி மசால், அகத்தி முருங்கை இலை, சுபாபுல், கிளிரிசிடியா ஆகியவைகளை அளவுக்கு அதிகமாக வழங்குவது

அல்லது அடர் தீவனத்தை அதிகமாக கொடுப்பது

வைத்தியம்:

1) விளக்கெண்ணெய் 200 மி.லி யுடன் தேவையான வெதுவெதுப்பான குடி தண்ணீர் சேர்த்து நன்றாக குலுக்கி இந்த திரவக் கலவையினை 4 – 6 மணி வரை இடைவெளிவிட்டு இருமுறை பாதிக்கப்பட்ட பெரிய மாடுகளுக்கு வாய் வழியே புகட்ட வேண்டும்.

2) வெற்றிலை 10 எண்ணிக்கை இலையுடன் இஞ்சி 20 கிராம், மிளகு 10 கிராம், வெள்ளைப்பூண்டு 10 கிராம், கல் உப்பு 50 கிராம் ஆகியவை சேர்த்து நன்றாக இடிக்கவும். மேற்கண்ட இடித்த கலவையுடன் வெது வெதுப்பான குடி நீரில் கலந்து 6 மணி நேரம் இடைவெளியில் வாய் வழியே மாடுகளுக்கு கொடுக்க வேண்டும்.

மேற்கண்ட இடித்த கலவையின் அளவை சிறிய கன்றுகள் செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளின் வயிறு மற்றும் உடல் எடைக்கு தகுந்த படி குறைவான அளவு கொடுக்கவும்.

## 3) கழிச்சல்

அறிகுறிகள் : சாணம் தண்ணீராக வெளியேறும்

நோய் காரணங்கள் :

செரியாத்தன்மை; கெட்டுப்போன தீவனம் உண்பது; விஷச் செடிகள் உட்கொண்டதால்

வைத்தியம் :

1. வேப்பங்கொழுந்து, கொய்யாகொழுந்து, ஆவாரம் ஒவ்வொன்றும் கைப்பிடி அளவு எடுத்து சீரகம் 10 கிராம், வெல்லம் 100 கிராம் சேர்த்து அரைத்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

2. கொய்யாகொழுந்து ஒரு கைப்பிடி அளவு, சுக்கு 50 கிராம், வெல்லம் 100 கிராம் ஆகியவற்றை தனித்தனியாக இடித்து இந்த மூலிகைக்கலவையை 3 உருண்டையாக பிரித்து ஒரு வேளைக்கு ஒரு உருண்டை வீதம் 3 வேளை கழிச்சல் நிற்கும் வரை கொடுக்க வேண்டும்.

## 4. மலச்சிக்கல் / வயிறு கட்டுதல்

அறிகுறிகள் :

1) சாணம் வெளியேற்ற முடியாமல் கட்டிப்பட்டு இருத்தல்

2) வெளியேறும் சாணம் சிறிது ஈரத்தன்மை இல்லாமல் கட்டியாக இருத்தல் .

காரணங்கள் :

ஆடு மாடுகளுக்கு ஏற்படும் காய்ச்சல், வெயில் காலத்தில் அதிக உஷ்ணம் அல்லது வெக்கையில் ஆடுமாடுகள் பாதிக்கப்படுதல், உஷ்ணம் காரணமாக உடலில் உள்ள நீர் அதிக அளவில் வெளியேறுவதால்.



வைத்தியம் :

1) மாடுகளுக்கு எனிமா கேனில்

5 லிட்டர் நீரில் 100 கிராம் வேப்ப இலையை கொதிக்க வைத்து பின்னர் ஆற வைக்க வேண்டும். இதனை ஆசனவாய் வழியாக எனிமா நீரை உள்ளே செலுத்திவிட்டு கையை வைத்து சிறிது நேரம் ஆசனவாயை அடைக்க வேண்டும். பின்னர் கையை எடுத்துவிட்டால் சாணம் வெளியேறும். சினை மாடுகளுக்கு இந்த இனிமா நீர் வைத்திய முறையை செய்யக் கூடாது. ஆடுகளுக்கு 2 லிட்டர் நீர் போதுமானது.

2) விளக்கெண்ணெய் 500 மி.லி யை மாடுகளுக்கு 1 அல்லது 2 நாட்களுக்கு கொடுக்கவேண்டும்.

3) மஞ்சள் கிழங்கை 100 கிராம் எடுத்து 1 லிட்டர் நீரில் கொதிக்க வைத்து வடிகட்டிய கசாயத்தை ஒரு நாளைக்கு ஒரு முறையாக 1 – 3 நாட்களுக்கு மாடுகளுக்கு கொடுக்கலாம்.

## 5. குடற்புழுக்கள்

அறிகுறிகள் :

- மாடு ஆடுகள் மெலிந்து இளைத்து காணப்படும்
- உடலின் மேல் உள்ள ரோமம் பெரியதாக இருக்கும்
- துர்நாற்றத்துடன் கூடிய சாணம் வெளியேறும்
- சாணத்தில் ஒரு சில புழுக்கள் உயிருடன் காணப்படும்

காரணங்கள் :

ஆடு மாடுகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படுத்தும் நாக்குப்பூச்சி, உருண்டைப் புழு, நாடாப் புழு, கொக்கிப்புழு,

ஈரல் பாதிக்கும் தட்டைப் புழுக்களால் உண்டாகிறது.

வைத்தியம்:

தேவையான மூலிகை பொருட்கள்

1) நொச்சி இலை 1 கிலோ

2) சோற்றுக்கற்றாழை மடல்கள் 1 கிலோ

3) வேப்பங்கொட்டை விதை 1 கிலோ

4) சங்கங்குப்பி இலை 1 கிலோ

5) எருக்கு இலை 1 கிலோ

மேலே கூறிய அனைத்து மூலிகைகளையும் தண்ணீர் சிறிது தெளித்து தனித்தனியே அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இவைகளை ஒன்று சேர்த்த மூலிகைக் கலவையை நன்கு வடிகட்டி ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த கரைசலை ஒரு செம்மறி ஆடு அல்லது வெள்ளாட்டிற்கு ஒரு முறை குடற்புழுக்கள் நீக்கம் செய்ய 20 மி.லி அளவு வாய் மூலம் புரையேராதபடி கொடுக்கவும். 3 மாதம் வயதுக்கும் குறைவான செம்மறி அல்லது வெள்ளாட்டுக் குட்டிகளுக்கு 10 மி.லி மட்டுமே வாய் மூலம் வழங்க வேண்டும். வளர்ந்த மாடுகளுக்கு 50 மி.லி வாய் மூலம் வழங்கலாம். மேற்கூறிய முறையில் தயாரிக்கப்பட்ட குடற்புழு நீக்க திரவ மருந்தை ஒரு மாதம் வரை சேமித்து வைத்து பயன்படுத்தலாம். இந்த குடற்புழு நீக்க மருந்து வழங்கப்படும் போது சாணம் திரவமாக போடுவது மாறி கட்டியாக சாணம் வெளியேறும்; துர்நாற்றமும் மாறி நல்ல முறையில் சாணம் வெளியேறும்.

மேலும் ஆடு மாடுகள் நன்றாக மேய்ச்சல் எடுக்கும் திறன் அதிகரிக்க உதவும். மேய்ச்சல் அதிகமாக எடுப்பதாலும், சாணம் கெட்டியாக மாறுவதாலும் ஆடு மாடுகள் மீண்டும் சுறுசுறுப்பான ஆரோக்கியமான நிலைக்கு திரும்பும்.

## 6) வெளிப்புற ஒட்டுண்ணிகள்

### (ஒட்டுண்ணி, பேன்கள், செல்கள்)

அறிகுறிகள் :

- ஆடு மாடுகளின் தோல் பகுதியில் ரோமத்திற்குள் மறைந்து கொண்டு அதிக எண்ணிக்கையில் ஒட்டுண்ணிகள் காணப்படும். குளம்புகளுக்குள் காது மடலுக்குள் மற்ற உடல் பகுதிகள் அனைத்திலும் நேரடியாக ஒட்டுண்ணிகளை பார்க்கலாம்.
- ஆடு மாடுகள் இரத்த சோகை பாதிப்பால் மிகவும் மெலிந்து இளைத்து காணப்படும்.
- பாதிக்கப்பட்ட கால்நடைகள் மிகவும் சோர்வுடன் காணப்படும்.
- அதிக பாதிப்பு உள்ளவை இறந்து விடும்.

வைத்தியம் :

1) வெள்ளைப்பூண்டு, துளசி, வேப்பிலை, மஞ்சள் பொடி, சீதாப்பழ விதைகள் ஒவ்வொன்றும் 10 முதல் 20 கிராம் அளவுக்கு எடுத்துக் கொண்டு நன்றாக அரைத்த கலவையை 250 மி.லி வேப்பெண்ணெய் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். இந்த மூலிகை கலந்த

வேப்பெண்ணெயினை பெரிய மாடுகளுக்கு மேற்புறத்தோல் பகுதியில் தேய்த்து பூசவும்.

2) உண்ணிச்செடியினை (Lantana camara) பறித்து சிறு துண்டுகளாக நறுக்கி அதனை இடித்து அதில் தேவையான அளவு பசு மாட்டின் கோமியம் சேர்த்து கலக்கி 3 நாட்கள் ஊறவைக்க வேண்டும். இந்த கலவையை வைத்துக் கொண்டு தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு வெளிப்புறம் பூசி விடவும். புகையிலை இலை, தண்டு பகுதியை 250 கிராம் அளவு 2 லிட்டர் அளவு நீரில் நன்றாக கொதிக்க வைக்கவும். இந்த திரவத்தில் 5 லிட்டர் நீர் சேர்த்து தெளிப்பான் உதவியுடன் 10 முதல் 20 ஆடு மாடுகளுக்கு வெளிப்புறமாக தெளிக்க வேண்டும்.

3) கந்தகத்தூள் (சல்பர்) 10 கிராம் எடுத்து தூளாக வைத்துக்கொள்ள வேண்டும். 10 கற்பூரவில்லையை அரைத்து தனியாக வைத்து கொள்ள வேண்டும். வேப்பஎண்ணெய் அல்லது புங்க எண்ணெய் 100 மி.லி யில் மேற்கண்ட பொருட்களை கலந்து ஆடுமாடுகளுக்கு வெளிப்புறத்தில் தடவிவிட வேண்டும். பின்னர் 2 நாட்கள் கழித்து ஒட்டுண்ணிகள் இறந்தவுடன் குளிப்பாட்டலாம்.

## 7) சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள்

1) மூச்சு வெளியேறும் போது குறட்டை சத்தம் கேட்கும்.

2) மூச்சு விடுவதற்கு சிரமப்படும்.

வைத்தியம் :

1) துளசி இலை 100 கிராம் மற்றும் ஆடாதொடை இலை

100 கிராம், இஞ்சி 50 கிராம், மிளகு 10 கிராம், வெல்லம் 100 கிராம் ஆகிய அனைத்தையும் 1 லிட்டர் நீரில் கொதிக்க வைத்து ஆறவைத்து 100 மி.லி முதல் 250 மி.லி அளவு தேவைக்கு ஏற்பவும் எடைக்கு தகுந்த படி மேற்குறிய மூலிகை திரவத்தை தினசரி 2 அல்லது 3 முறை வழங்கலாம்.

2) கண்டங்கத்திரி பழம் சிறிதளவு (6 முதல் 8), மிளகாய் பழம் 3, சுண்ணாம்புத்தூள் 5 கிராம் சேர்த்து அரைத்து 1/2 லிட்டர் சுடுநீரில் கலந்து 20 நிமிடங்கள் வைக்கவும். இதனை வடிகட்டி ஆட்டுக்கு 1/4 லிட்டர், மாட்டுக்கு 1/2 லிட்டர் உள்ளே தரவும். ஒரு நாளைக்கு 1 வேளை, 2–3 நாட்கள் தர வேண்டும்.

3) மூக்கில் ஈ முட்டை இடுவதால் வரும் மூக்கடைப்பானுக்கு கண்டங்கத்திரி பழம் சிறிதளவு (4 முதல் 6) இவைகளை நசுக்கி ஆட்டு சிறுநீரில் அல்லது பசு மாட்டின் கோமியத்தில் இரவு முழுவதும் அதனை ஊற வைத்து பின்னர் வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். மேற்கூறிய வடிகட்டிய திரவத்தை ஒரு சில துளிகள் மட்டும் பாதிப்புள்ள ஆடு மாடுகளுக்கு மூக்கில் உள்ளே விடவும்.

## 8) காய்ச்சல்

அறிகுறிகள் :

1) கால்கள் மற்றும் உடம்பில் நடுக்கம் ஏற்படுதல்
2) ரோமம் குத்திட்டு மேல் நோக்கி இருத்தல்
3) கண்களில் நீர் சொரிதல்
4) பாதிக்கப்பட்ட மாடு / ஆடு படுத்தே இருத்தல்

5) தீவனம் அல்லது தண்ணீர் அருந்தாமல் இருத்தல்



6) பால் உற்பத்தியில் குறைவு ஏற்படுதல்

வைத்தியம் :

1) மண் சட்டியில் அடுப்புக்கரி அல்லது காய்ந்த விறகு உதவியுடன் தீக்கங்கினை உண்டாக்கி தீக்கங்கில் வேப்பங்கொட்டை விதைகள் 100 கிராம் (வேப்பங்கொட்டை தோலையும் போடலாம்). இதில் தும்பை, வேப்பஇலை, முடக்கத்தான் இலையும் சேர்க்கலாம். இதிலிருந்து வரும் புகையை மாடுகளின் தலை முன்பு படுமாறு வைக்கவும். பாதிக்கப்பட்ட மாடு மேற்கூறிய புகையினை நன்கு சுவாசிக்கும் படி செய்தல் வேண்டும்.

2) ஓமம், கஸ்தூரிமஞ்சள், வெள்ளைப்பூண்டு, மிளகு இவை நான்கினையும் ஒவ்வொன்றும் 5 கிராம் அளவுக்கு எடுத்துக் கொண்டு அதனை தூள் செய்து சுடு நீரில் கலந்து கரைத்து தேவைக்கு ஏற்ப வாய் மூலம் உள்ளே ஒரு நாளைக்கு 2 முறை கொடுக்கவும்.

3) அரிசி அல்லது கம்பு குருணையாக செய்து 500 கிராம் அளவு நீரில் கலந்து கொதிக்க வைத்து ஆறியவுடன் மாடுகளுக்கு வழங்கலாம்.

4) குடிநீர் வழங்கப்படும் போது நன்றாக கொதிக்க வைத்து ஆறிய குடிநீரை மட்டும் கொடுக்கவும்

5) பச்சை புல், பச்சை தீவனத்தட்டை தீவனமாக

கொடுப்பதை தவிர்த்து காய்ந்த தட்டை அல்லது வைக்கோல் கொடுக்கலாம்.

## 9. கோமாரி நோய் (கால்காணை, வாய்காணை)

அறிகுறிகள் :

பாதிக்கப்பட்ட மாடு, ஆடுகளில் வாயில் உமிழ்நீர் வெளிவரும். வாய்ப்பகுதியில் புண்கள் காணப்படும். கால் குளம்புகளின் இடைவெளியில் சீழ் பிடித்த புண்கள் தெரியும். பாதிக்கப்பட்ட மாடுகள் நடப்பதற்கு மிகவும் சிரமப்படும்.

வைத்தியம் : தேவையான பொருட்கள் மற்றும் அளவுகள்

1) புதிதாக அறுவடை செய்யப்பட்ட மஞ்சள் கிழங்கு 200 கிராம்
2) ஒரு தேங்காயில் எடுக்கப்பட்ட தேங்காய் துருவல்
3) சோற்றுக்கற்றாழை மடல் – 200 கிராம்
4) வெல்லம் – 200 கிராம்
5) சமையல் உப்பு 100 கிராம்
6) வெள்ளைப் பூண்டு – 100 கிராம்
7) மிளகு – 50 கிராம்
8) சீரகம் – 50 கிராம்
9) வெந்தயம் – 50 கிராம்

கிரைண்டர் அல்லது மிக்ஸி உதவியுடன் தேங்காய் துருவல், சோற்றுக்கற்றாழை, மஞ்சள் கிழங்கு, வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை நன்றாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

தேவையான நீர் கலந்து அரைத்து அதனை சுத்தமான பாத்திரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மிளகு, சீரகம், வெந்தயம் ஆகியவற்றை தூள் செய்து தூள் செய்த வெல்லத்துடன் மேற்கூறிய மூலிகை மருந்து கலவையில் சேர்க்க வேண்டும். இதில் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து 1 லிட்டர் அளவு வரும் வரை வைத்துக்கொள்ள வேண்டும். இதனை வடிகட்டி எடுக்கப்பட்ட மூலிகை திரவத்தை வாய் மூலம் ஆடு மாடுகளுக்கு உள்ளே கொடுக்க வேண்டும்.

மருந்து கொடுக்கும் அளவு

1) பெரிய மாடுகளுக்கு 100 மி.லி.

2) கன்றுகள் செம்மறி / வெள்ளாடுகளுக்கு 50 மி.லி என்ற அளவு கொடுக்க வேண்டும்.

3) மூலிகை திரவ மருந்து பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு கொடுப்பதற்கு முன் 2 வாழைப்பழத்தை 50 மி.லி நல்லெண்ணெயில் தோய்த்து வாய் மூலம் கொடுக்கவும். ஆடுகளுக்கு ஒரு வாழைப்பழம் போதுமானது. இதனை 2 வேளைகள் 2–3 நாட்களுக்கு கொடுத்து வரலாம். ஆட்டிற்கு 1 பழம் போதுமானது.

கால் குளம்பு பகுதியில் உள்ள புண்களுக்கு தைலம் தயாரிக்கும் முறை :

முதல்முறை தேவையான பொருட்கள் :

(1) நல்லெண்ணெய் – 1 லிட்டர்

(2) மஞ்சள் கிழங்கு புதிதாக அறுவடை செய்யப்பட்டது– 100 கிராம் அல்லது மஞ்சள் பொடி – 50 கிராம்

(3) வெள்ளைப்பூண்டு – 50 கிராம்

(4) வேப்ப இலை – 10 கிராம்

(5) மருதாணி செடி இலை – 10 கிராம்

(6) குப்பைமேனி இலை – 10 கிராம்

மூலிகை இலைகள், மஞ்சள் , வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை நன்றாக அரைத்து கலந்து கொள்ளவும். இவற்றை நல்லெண்ணெய்யுடன் கலந்து மூலிகை கலந்த எண்ணெயை நன்கு கொதிக்க வைக்கவும். கொதிக்க வைத்த மூலிகை எண்ணெயை ஆற வைத்து வடிகட்டி ஒரு பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொள்ளவும்.

மேற்கூறிய மூலிகை தைல எண்ணெய் தினசரி புண் பாதித்த குளம்புகள் மீது பூசவும் தேவைக்கு ஏற்ப தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு அல்லது குளம்பு புண் நன்றாக ஆறி சரியாகும் வரை பூசலாம்.

இரண்டாவது முறை : தேங்காய் எண்ணெய் 500 மி.லி யுடன் ஊமத்தை இலைச்சாறு 500 மி.லி சேர்த்து இந்த கலவையை ஒரு பாத்திரத்தில் எண்ணெய் பதம் வரும் வரை சுமார் ஒரு மணி நேரம் கொதிக்கவிட வேண்டும். பின்னர் அடுப்பை அணைத்து விட்டு இந்த எண்ணெய் பதத்தில் உள்ள திரவத்தில் 5 கிராம் அளவு மயில் துத்தம் கலந்து நன்றாக கலக்க வேண்டும். இந்த தைலத்தை சுத்தமான கண்ணாடி பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு தேவைப்படும் போது பயன்படுத்தலாம்.

கோமாரி நோய் கால் குளம்பு புண்ணுக்கு மட்டும் அல்லாமல் மற்ற வகை புண்களுக்கு ஈ முட்டையிட்டதால் வந்த புழு வைத்த புண்களுக்கும் இந்த தைலத்தைப் பயன்படுத்தலாம்.

நோய் பாதித்த கால்நடைகளுக்கு அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு குருணைகளை கொதிக்க வைத்து ஆற வைத்து கஞ்சியாக தினமும் 100 கிராம் முதல் 200 கிராம் குடிநீர் கலந்து தானே குடிப்பதற்கு கொடுக்கலாம்.

**10) பால் கறவை மாடுகளில் மடி நோய்**

அறிகுறிகள் :

பாதிக்கப்பட்ட பால் மடி பெரிதாக வீக்கத்துடன் இருத்தல், மடியைத் தொட்டுப் பார்த்தால் மிகவும் சூடாக இருத்தல், பால் நிறம் திரிந்து நூல் போலும் சீழ் போன்ற அடர்த்தியுடன் இருத்தல்.

காரணங்கள்:

தொற்றும் நோய் கிருமிகள்

வைத்தியம்: தேவையான மூலிகை பொருட்கள்

1) சோற்றுக்கற்றாழை 2 அல்லது 3 மடல்கள்

2) மஞ்சள் பொடி – 50 கிராம்

3) சுண்ணாம்பு கல் / தூள் – 10 கிராம்

சோற்றுக்கற்றாழையை மிக்சியில் அரைத்து இத்துடன் மஞ்சள் தூள், சுண்ணாம்புத் தூள் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பால் கறந்தபின் மடியை

வெந்நீரால் கழுவி இந்த களிம்பினை தேவைக்கு ஏற்ப ஒரு நாளைக்கு 3 வேளையும் பாதித்த மடியின் மேல் பூச வேண்டும். வியாதியின் தன்மைக்கு ஏற்ப 3 முதல் 7 நாட்கள் வரை இந்த களிம்பினை பாதிக்கப்பட்ட மடி மீது பூசலாம்.

மேலும் வாய் மூலம் கீழ்கண்ட மருந்தினை தயார் செய்து வழங்கலாம்.

நான்கு எலுமிச்சை பழங்களை பிழிந்து கிடைத்த சாற்றுடன் 50 கிராம் சமையல் சோடா சேர்த்து 200 மி.லி குடிநீர் சேர்த்து இந்த சாற்றினை பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு வாய் மூலம் உள்ளே கொடுக்கலாம்.

## 11. சினை தங்காமை / பருவ அறிகுறி தோன்றாமை / கருச்சிதைவு நோய்கள்.

அறிகுறிகள்:

பசுக்கள் பருவத்திற்கு வராமல் இருக்கும், பருவத்திற்கு வந்தாலும் பருவ அறிகுறிகள் வெளியே தெரியாமல் இருத்தல், பலமுறை தொடர் இனவிருத்தி செய்தும் கருப்பிடிக்காமல் இருத்தல், சினை தங்காமல் கருச்சிதைவு ஏற்படுதல்.

வைத்தியம்:

1) சோற்றுக்கற்றாழை மடல் முள் நீக்கி 1 அல்லது 2 மடல்கள் தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு காலையில் வெறும் வயிற்றில் மாடுகளுக்கு கொடுக்க வேண்டும். 15 நாட்களுக்குத் தொடர்ச்சியாக 200 கிராம் அளவு முளைகட்டிய கொண்டைக்கடலை

அல்லது முளை கட்டிய கோதுமை விதைகள் அல்லது முளை கட்டிய கம்பு வாய் மூலம் உள்ளே கொடுக்க வேண்டும்.

2) இவ்வாறு வைத்தியம் செய்து வரும் சமயம் மாடு முடையடிக்கும். அதாவது பருவத்திற்கு வரும். இச்சமயத்தில் வாய் வழியே 150 மி.லி வேப்ப எண்ணெய் உள்ளே கொடுக்க வேண்டும். பருவ அறிகுறிகள் தோன்றிய பின் 24 மணி நேரத்தில் செயற்கை முறை இனவிருத்திஅல்லது பொலி காளையுடன் சேர்க்க வேண்டும்.

3) செயற்கை முறை இன விருத்தி அல்லது இயற்கை முறை பொலி காளையுடன் சேர்த்த பின்பு 2 கைபிடி அளவு கருவேப்பிலை இலைகள் தினசரி 7 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

## 12. இளங்கொடி விழா திருத்தல்

அறிகுறிகள் :

கன்று பிறந்த பின்னர் 3 முதல் 5 மணி நேரத்திற்குப்பிறகும் நஞ்சுக்கொடி விழாமலிருத்தல்.

வைத்தியம்:

1) 2 எள் செடியின் இலைகள் சுமார் 250 கிராம் அளவு அரைத்து ஒரு லிட்டர் நீரில் கலந்து பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு வாய் மூலம் உள்ளே கொடுக்கலாம். அல்லது வெண்டைக்காய் 1/2 கிலோ தின்னக் கொடுக்கலாம்.

2) 100 கிராம் அளவு எள் விதையினை 100 கிராம் வெல்லத்தை சேர்த்து இடித்து உருண்டையாக வாய் மூலம் கொடுக்கலாம்.

3) யானை நெருஞ்சி செடி 200 கிராம் அளவு எடுத்து நறுக்கி ஒரு லிட்டர் நீரில் சில நிமிடங்கள் ஊற வைத்து கலக்கினால் சோப்பு போன்ற நுரையுடன் கூடிய திரவம் கிடைக்கும். இந்த திரவத்தை பாதிக்கப்பட்ட மாட்டுக்கு வாய்க்குள் புகட்ட வேண்டும்.

## 13) கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்

அறிகுறிகள் :

கன்று பிறப்புக்கு முன்னர் அல்லது கன்று பிறந்த பின்னர் கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்.

வைத்தியம்:

வெளித்தள்ளப்பட்ட கர்ப்பப்பையின் வெளிப்புறத்தில் சீனி சேர்க்கப்பட்ட நீரை பயன்படுத்தியோ அல்லது கிருமி நாசினி திரவம் (பொட்டாஷியம் பெர்மாங்கனேட்) பயன்படுத்தி சுத்தம் செய்தல் வேண்டும். வெளியேற்றப்பட்டுள்ள கர்ப்பப்பை பகுதியின் கீழ் ஒரு பெரிய வாழை இலையைக் கொண்டு இரண்டு கைகளால் தாங்கி பிடிக்க வேண்டும். (கர்ப்பப்பை பகுதியை கையாளும் போது மிகவும் கவனத்துடனும் நகம் படாமலும், கையாளும் போது கிழிபடுதல் அல்லது புண் ஏற்படாமலும் செயல்பட வேண்டும். கர்ப்பப்பை பகுதியை தொடுவதற்கு முன் இரண்டு கைகளையும் கிருமி நாசினி உபயோகித்து சுத்தமாக இருத்தல் வேண்டும்).

பெருவாரியான சமயங்களில் கர்பப்பை வெளித்தள்ளப்பட்ட பின் சிறுநீர் வெளியேறாமல் சிறுநீர் பை முழுவதும் சிறுநீரால் நிறைந்து காணப்படும். வாழை

இலையைப் பயன்படுத்தி கர்ப்பப்பை பகுதியை உயர்த்தி பிடிக்கும் போது சிறுநீர் முழுவதும் வெளியேறும். சிறுநீர் முழுவதும் வெளியேறிய பின் வெளியேற்றப்பட்ட கர்ப்பப்பை பகுதியை மீண்டும் பழைய நிலைக்கு உள்ளே தள்ளினால் எளிதாகச் செல்லும்.

1) 2 கைபிடி அளவு தொட்டாற்சிணுங்கிச் செடியின் இலைகளை அரைத்து 200 மி.லி வெள்ளாட்டுப் பாலில் கலந்து காலை, மாலை மறுநாள் காலை என்று 3 முறை வாய் மூலம் கொடுக்கவும்.
2) கர்ப்பப்பை வெளித்தள்ளுதல் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு சினை மாடுகள் அல்லது கன்று ஈன்ற மாடுகள் முன் பகுதி தாழ்வாகவும் பின் பகுதி உயர்ந்தும் இருக்கும் வகையில் நிற்கும்படி பார்த்துக் கொள்ளவும். அதாவது தலைப்பகுதி தாழ்வாகவும் பின் பகுதி உயர்ந்து நிற்கும்படி ஒரு சரிவான தரையை தயார் செய்து பயன்படுத்தலாம்.
3) அதிகப்படியான தீவனத்தை ஒரே தடவை கொடுக்காமல் பிரித்து பலதடவைகளில் அளிக்க வேண்டும்.

## 14) நீல நாக்கு நோய்

நோய் ஏற்படும் காலம் : செம்மறி ஆடுகள், வெள்ளாடுகளுக்கு இந்நோய் மழைக்காலத்தில் உண்டாகும்

அறிகுறிகள்:

வாய் பகுதியில் சீழ் பிடித்த புண், வாயிலிருந்து உமிழ்நீர் ஒழுகுதல், பாதிக்கப்பட்ட ஆடுகள் நொண்டி நொண்டி

நடப்பது, நடக்க இயலாமல் சில நேரம் படுத்துக் கொள்ளும், பாதிக்கப்பட்ட ஆடுகளை எழுப்பிவிட முயலும் போது ஆட்டுத் தோலில் உள்ள ரோமங்கள் உடலில் இருந்து கீழே விழுந்து விடுதல், தீவனம் எதுவும் திண்ணாமல் இருக்கும். ஆனால் சிறிய அளவு தண்ணீர் மட்டும் குடிக்கும்.

நோயின் தீவிரம் அதிகரிக்கும் போது நோய் பாதித்த 15 நாட்களில் ஆடுகள் இறந்து விடும்.

வைரஸ் நுண்கிருமியினால் இந்த நோய் உண்டாகிறது. கொசுக்களும் ஈக்களும் இந்த நோய் கிருமியைப் பரப்பும் காரணிகளாக செயல்படுகிறது.

வைத்தியம் :

பாதித்த ஆடுகள் தீவனம் எதுவும் எடுக்காமல் இருப்பதால் பட்டினியால் இறப்பு ஏற்படும். இதற்கு பூவன் வாழைப்பழத்தை நல்லெண்ணெயில் கலந்து ஒரு ஆட்டிற்கு ஒரு பழம் தர வேண்டும். 20 ஆடுகளுக்கு சுமார் 1/2 லிட்டர் நல்லெண்ணெய் மற்றும் 20 வாழைப்பழம் தேவைப்படும். மேற்கூறிய வைத்தியத்தால் சிறிது சிறிதாக பாதிக்கப்பட்ட ஆடுகள் நோய் பாதிப்பில் இருந்து மீண்டு வரும். இருப்பினும் இந்த சிகிச்சை நோயின் தீவிரத்தை குறைக்க உதவாது. எனவே தொடர் சிகிச்சையாக சோற்றுக்கற்றாழை (முள் தோல் நீக்கப்பட்டு) நொங்குப் பகுதியை சுமார் 100 கிராம் தினசரி வாய் வழியே உள்ள புகட்ட வேண்டும். ஆடுகள் நோயின் பாதிப்பிலிருந்து மீண்டு வரும் வரை (தொடர்ந்து 3–4 நாட்கள்) சோற்றுக்கற்றாழை மடல் தினசரி வாய் மூலம் கொடுத்து வர வேண்டும்.

சோற்றுக்கற்றாழையை தொடர்ச்சியாக ஆடுகளுக்கு கொடுத்து வரும் சமயம் அதன் உடல் எடை அதிகரிக்கும். ஆடுகளின் வயிற்றில் உள்ள புழுக்கள் நீங்கும். குடற்புழு மருந்தாக சோற்றுக்கற்றாழை செயல்படும்.

மேற்கூறிய காரணத்தால் மழைக்காலங்களில் ஆடுகளில் நோய் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக நோய் தவிர்ப்பு வைத்தியமாக ஒவ்வொரு மாத இடைவெளியில் வாய் வழியே சோற்றுக்கற்றாழை மடலை கொடுக்க வேண்டும்.

## 15 விஷக்கடி அல்லது விஷமுள்ள தீவனம் உண்ட பாதிப்பு

வைத்தியம் :

1. வெற்றிலை, துளசி, மிளகு சுக்கு ஆகியவை ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு எடுத்துக் கொண்டு அதனை இடித்த கலவையுடன் வெது வெதுப்பான நீரில் கலந்து வாய் வழியே உள்ளே கொடுக்க வேண்டும்.

2. அடுப்புகரி 100 கிராம் எடுத்து 1 லிட்டர் பாலில் கலக்க வேண்டும். இத்துடன் 1 லிட்டர் நீர் சேர்த்து உள்ளே புகட்டவும். ஆட்டிற்கு பாதியளவு (1 லிட்டர்) உள்ளே தரவும். ஒரு நாளைக்கு ஒரு தடவை 2 நாட்கள் தரவும்.

## 16) கண்ணில் ஏற்படும் புண்களுக்கு (கண் நோய்க்கு)

கோவைச்செடி இலை அல்லது ஆமணக்கு இலையை ஒரு சிட்டிகை சமையல் உப்பினை சேர்த்து கசக்கினால் வரும் சாற்றின் சில துளிகளை பாதிக்கப்பட்ட கண்ணில் விடவேண்டும்.

## 17) புண்கள்

வைத்தியம் :

1. புண்களுக்கு மூலிகைத்தைலத்தை கீழ்கண்ட முறையில் தயார் செய்து புண் பகுதிக்கு மேல் பூச வேண்டும்.

மூலிகை தைலம் செய்முறை:

தேங்காய் எண்ணெய் 250 மி.லியுடன் ஊமத்தை இலை பிழிந்த சாறு 250 மி.லி ஒன்று சேர்த்து இந்த கலவையை ஒரு பாத்திரத்தில் நன்றாக கொதிக்க வைக்கவும். ஒரு மணி நேரம் கொதிக்க வைக்கும் போது எண்ணெய் பதத்தில் திரவம் கிடைக்கும். பின்னர் அடுப்பை அணைத்து விட்டு மயில் துத்தம் 2 ½ கிராம் அளவு சேர்த்து நன்கு கரையும் வரை கலக்கவும்.

இந்த மூலிகைத் தைலத்தை ஒரு கண்ணாடி பாட்டிலில் சேமித்து எல்லா வித புண் பாதிப்புகளுக்கும் புழு வைத்த புண்களுக்கும் பூசி வரலாம்.

2) வெள்ளாடுகளுக்கு வரும் வாய்ப்புண்ணிற்கு பன்றிக் கொழுப்பு 100 மி.லியுடன் கஸ்தூரி மஞ்சள் 10 கிராம் கலந்து பூச வேண்டும்.

## 18) கன்றுகளின் கழிச்சல் நோய்

காரணம் :

பசு மற்றும் எருமைக் கன்றுகளை பாக்டீரியா நுண் கிருமி தாக்குவதால் கன்று கழிச்சல் நோய் ஏற்படும்.

அறிகுறிகள் :

துர்நாற்றத்துடன் கூடிய கழிச்சல் தெரியும்; காய்ச்சல் இருக்கும்; கன்றுகள் சோர்வுடன் செயலற்று நின்று கொண்டிருக்கும்; பார்வை இயல்பாக இல்லாமல் கண்கள் நோய் அறிகுறியுடன் தெரியும். உஷ்ணமானி கொண்டு சோதித்தால் 104 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணநிலையில் காய்ச்சல் இருக்கும்.

வைத்தியம் :

கொய்யா கொழுந்து இலை 200 கிராம், சுக்கு 50 கிராம் சேர்த்து இடித்து உருண்டை பிடித்து ஒரு நாளைக்கு ஒரு முறை இரண்டு நாட்கள் வாய் வழியாக உள்ளே புகட்ட வேண்டும்.

## 19) கால்நடைகளின் ஆரோக்கியத்திற்கு பயன்படும் பஞ்சகவ்யா

பஞ்சகவ்யாவை கால்நடைகளுக்கு கொடுத்து வந்தால் மாடுகளுக்கு சினை தங்காமை, மீண்டும் மீண்டும் சினைப்படுத்தியும் கருதங்காமை போன்ற பாதிப்புகள் ஏற்படாது.

செய்முறை :

பசுவிலிருந்து கிடைக்கும் 5 பொருட்கள் (சாணம், சிறுநீர், பால், தயிர், நெய்) கொண்டு தயாரிக்கப்படுகிறது.

1) பசுவின் சாணம் – 1 கிலோ
2) பசுவின் கோமியம் – 1 லிட்டர்
3) பசுவின் பால் – 1 லிட்டர்
4) பசுவின் தயிர் – 1 லிட்டர்
5) பசு நெய் – 100 கிராம்

மேற்கூறிய 5 பொருட்களுடன் 2 வாழைப்பழம், வெல்லம் 500 கிராம் ஆகியவற்றை சேர்த்து ஒரு பிளாஸ்டிக் வாளியில் கலக்கி விடவும். மேற்கூறிய கலவை நன்றாக நொதித்துப்போகும் அளவுக்கு ஒரு வாரம் வரை வைத்திருக்கவும் (பிளாஸ்டிக் வாளியினை துணியால் மூடி வைக்க வேண்டும்).

வைத்திய செய்முறை :

1) பசுக்களை ஆரோக்கியமாக பராமரிக்க மாதம் ஒரு முறை 300 மி.லி பஞ்சகாவ்யா வாய் வழியே கொடுக்கலாம்.

2) செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு மாதம் ஒரு முறை 100 மி.லி அளவு பஞ்சகவ்யா வாய் வழியே கொடுக்கலாம்.

3) தோல் நோய் பாதிப்பு உள்ள நாய்களுக்கு 3 நாட்கள் 100 மி.லி பஞ்சகவ்யா தொடர்ந்து கொடுக்கலாம்.

4) கோழிகளின் தீவனத்தில் பஞ்சகவ்யா கலந்து வழங்கலாம். 12 கோழிகளுக்கு சுமார் 50 மி.லி

பஞ்சகவ்யா என்ற விகிதத்தில் தீவனத்தில் கலந்து கொடுக்கலாம்.

முட்டை இடும் கோழிகளுக்கு பஞ்சகவ்யா கொடுக்கப்படும் போது அந்த கோழிகள் பெரிய முட்டைகள் அதிகமாக இடுவதுடன் கோழிகளின் வளர்ச்சி நன்றாகவும் விரைவாகவும் தேவையான எடையினை அடைய உதவும்.

## 20. பால் காய்ச்சல் நோய்

காரணம் :

இந்த நோய் அதிக பால் கறக்கும் மாடுகளை மட்டும் பாதிக்கிறது. குறிப்பாக கன்று ஈன்ற 48 மணி நேரத்தில் இரத்தத்தில் உள்ள கால்சியம் எனப்படும் சுண்ணாம்பு சத்து மிகவும் குறைந்து விடுவதால் ஏற்படுகிறது.

வைத்தியம் :


ஒரு சுத்தமான மண் சட்டியில் 1 கிலோ சுண்ணாம்புக்கல் (கால்சியம் ஹைடிராக்சைடை) எடுத்துக் கொண்டு அதில் நீர் 10 லிட்டர் அளவு சேர்த்து கரைக்கவும். இந்த கலவை நீரை ஓர் இரவு முழுவதும் அப்படியே வைக்கவும். மறுநாள் காலை இந்த மண் பாத்திரத்திலிருந்து 200 மி.லி அளவு தெளிந்த சுண்ணாம்பு நீரை எடுத்து குடிநீர் தொட்டியில் சேர்த்து குடிக்க விட வேண்டும். இதனை தினமும் கடைப்பிடித்து வர வேண்டும். தினமும் நீர் 200 மி.லி. கலவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இம்முறையில் தயார் செய்யப்பட்டுள்ள சுண்ணாம்பு தெளிந்த நீரை 20 நாட்களுக்கு மேற்கூறிய முறையில் பயன்படுத்திய பின் தொட்டியை சுத்தம் செய்து மீண்டும் புதிதாக சுண்ணாம்புக்கல் பயன்படுத்தி புதிதாக தயாரிக்க வேண்டும். இந்த முறையில் சுண்ணாம்பு சத்து மாடுகளுக்கு வழங்கும் போது நோய் தவிர்க்கப்படும்.

## 21. எலும்பு முறிவு

காரணங்கள்:

கீழே விழுவதால், அதிக பாரம் ஏற்றிச் செல்வதாலும், விபத்தினாலும் எலும்பு முறிவு ஏற்படும்.



வைத்தியம் :

ஊளுந்து 100 கிராம் தூள் செய்து சலித்து 3 கோழி முட்டை வெள்ளைக்கரு சேர்த்து பசையாக்கி ஒரு நீண்ட வெள்ளைத் துணியில் பசையை தடவி வைக்கவேண்டும். பின்பு எலும்பு ஏற்பட்டதை சரியாகப் பொருத்தி வைத்து உளுந்தம்பசை தடவப்பட்ட துணியால் சுற்ற வேண்டும். அதன்மேல் மூங்கில் தப்பைகளை நான்கு பக்கங்களிலும்

வைத்து அதற்கு மேல் பசை தடவிய துணியால் சுற்றி கட்டி விடவேண்டும். மூன்று தினங்களுக்கு ஒருமுறை கட்டை கழற்றிவிட்டு பின்பு புதுக்கட்டு போட வேண்டும். மூன்று கட்டு போட்டுவிட்டு நான்காவது கட்டு 15 அல்லது 20 நாள் வரை கட்டை அவிழ்க்காமல் விட்டுவிட வேண்டும். 20 நாட்களில் முறிந்த எலும்பு நன்றாகக் கூடிவிடும். பின்பு கட்டை அவிழ்த்து விடலாம். பின்பு சில நாட்களுக்கு கட்டு இருந்த பகுதியில் தேங்காய் எண்ணெய் விடவேண்டும்.

## 22. கொம்பு முறிவு

காரணங்கள்: அடுத்த மாடுகளுடன் முட்டிக் கொள்ளுதல், விபத்துக்கள், தலைப்புற்று, மண்டைக்கரப்பான் போன்ற காரணங்களால் உண்டாகலாம்.



வைத்தியம் :

ஒடிந்த கொம்பை நேராக நிறுத்தி மற்ற கொம்புடன் மூங்கில் குச்சி வைத்து படத்தில் காட்டியவாறு கட்ட வேண்டும். பனங்கருப்பட்டி பாலில் தலைமுடி சேர்த்து ஒடிந்த பகுதியைச் சுற்றி பூச வேண்டும். அல்லது புளியங்கொட்டை 20 எடுத்து அரைத்து நீரில் கொதிக்க வைத்து கிடைக்கும் பசையை கொம்பின் மேல் தடவ வேண்டும்.

## 23. படுத்த மாடு எழுந்து நடக்க

சத்து பற்றாக்குறைவினால் படுத்த மாடு எழுந்து நிற்க முடியாது.

வைத்தியம் :

தழுதாளை, முடக்கத்தான், வாதநாராயணன், மஞ்சள் கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி, நொச்சி, வேலிபருத்தி, குப்பைமேனி, சோற்றுக்கற்றாழை, பூண்டு, சின்ன வெங்காயம் ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து அரைக்க வேண்டும். தனியாக கருஞ்சீரகம், சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், பெருங்காயம், ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து அரைக்க வேண்டும். அனைத்தையும் சேர்த்து கருப்பட்டியுடன் கலந்து உருண்டை பிடித்து (100 கிராம்) உள்ளுக்கு கொடுக்க வேண்டும். இதனை 3 நாட்கள் கொடுத்து வர வேண்டும். வெளிப்பூச்சாக சூடான வேப்ப எண்ணெய் 1 லிட்டரில் நொச்சி, எருக்கம் பூ இடித்து துணியில் கட்டி நனைத்து உடம்பு முழுவதும் ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

## 24. பால் அதிகம் கறக்க

பால் குறைய காரணங்கள் :

வளர்ச்சி குறைவு, பால் மடி இறுக்கம், சினை பருவத்தில் கடைசி 60 நாட்கள் தொடர்ந்து விடாமல் பால் கறப்பது, சினை பருவத்தில் கடைசி 80 நாட்கள் போதிய அளவு அடர் தீவனம் இல்லாதிருப்பது, மாடு பலவீனமாக இருப்பது, உடலில் தாது உப்புகள், வைட்டமின் குறைவு, மாசி விழாமல் அடிதள்ளுதல், சுண்ணாம்பு சத்து குறைவு,

காணை நோயால் பாதிப்படைதல், செரிமான நோய்களால் பாதிப்படைதல், கொம்பு அறுத்தல், சுடுதல் போன்றவற்றால் பால் குறைகிறது.

வைத்தியம் :

சுரக்காய் 1 கிலோவுடன் வெந்தயம் 100 கிராம், தேங்காய் 1, ஊற வைத்த ஊளுந்தம் பருப்பு 200 கிராம், பனை வெல்லம் 250 கிராம் ஆகியவற்றை நன்கு ஆட்டி தினம் ஒரு வேளை வீதம் 5 நாட்களுக்கு கொடுத்து வந்தால் பாலின் அளவு அதிகரிக்கும். ஆட்டிற்கு பாதி அளவு கொடுக்க வேண்டும்.

## 25.கோழியினங்களை பாதிக்கும் நோய்கள்

### 1. ராணிக்கெட் அல்லது வெள்ளைக்கழிச்சல் நோய்:

அறிகுறிகள்:

கோழி எச்சம் வெண்மையான நிறத்திலும் அதிக திரவ நிலையிலும், சில நேரம் பச்சை நிறத்துடன் அதிக துர்நாற்றத்துடன் வெளியேறும். மூக்குப் பகுதியில் இருமல் அல்லது செறுமல் அறிகுறிகள் தெரியும். தலைப்பகுதி வீக்கத்துடன் பெருத்து இருக்கும். தலை மற்றும் கழுத்துப் பகுதி ஒரு பக்கமாக தொங்கிக் கொண்டிருக்கும். கோழியின் இறகுகள் தொங்கிக் கொண்டிருக்கும். கால் இழுத்துக் கொண்டு நடக்கும், சோர்வுடன் படுத்துக் கொண்டிருந்தால் உடலையும் காலையும் நீளமாக நீட்டிக் கொண்டிருக்கும்.

நோய் தீவிரம் அடையும் போது வலிப்பு மற்றும் உதைத்துக் கொள்ளுதல் ஏற்பட்டு இறுதியில் இறந்து விடும்.

நோய் தவிர்க்கும் எளிய முறை :

நோய் பாதித்த கோழிகளை / அறிகுறி தோன்றியவுடன் நல்ல ஆரோக்கியமான கோழிகளிடமிருந்து பிரித்து தனியாக பராமரித்து வைத்தியம் செய்தல்.

வைத்தியம்:

மிளகாய் பழம் 4, சோற்றுக்கற்றாழை, 20 கிராம், புதிதாக அறுவடை செய்யப்பட்ட மஞ்சள் கிழங்கு 20 கிராம், வெள்ளைப் பூண்டு 20 கிராம், மயில் கீரை ஒரு கைப்பிடி ஆகியவற்றை சிறு துண்டுகளாக நறுக்கி அரைத்து 2 லிட்டர் நீரில் 6 மணி நேரம் ஊற வைக்கவும்.

இதனை வடி கட்டி 10–20 மி.லி கோழிக்கு சிரிஞ்சில் ஊற்றலாம் அல்லது இந்த கலவையினை வழக்கமாக வழங்கப்படும் கோழித் தீவனத்துடன் சேர்த்து கொடுக்க வேண்டும் .

## 2. கோழிப் பேன்கள், செல் பூச்சிகள்

அறிகுறிகள் :

கோழி இறகுகளில் சிறிய வெள்ளை நிற பேன்கள் அதிக அளவு முட்டைகள் இடும்; தோல் மீதும் இறகுகள் மீதும் பேன்கள் காணப்படும்.

பேன் தாக்கத்தால் முட்டை உற்பத்தி பாதிப்பு இருக்கும். இளம் கோழிகள் உடல் வளர்ச்சி குறையும். கோழிகள் தங்கள் இறகுகளை அடிக்கடி கொத்திக் கொள்ளும். பேன் அதிகம் உள்ள பகுதிகளை கால் நகங்களால் அல்லது தன் அலகுகளால் கீறிக் கொண்டிருக்கும்.

வைத்தியம் :

1. சீத்தா பழ இலைகள் அல்லது எருக்கு இலைகளை சிறு துண்டுகளாக நறுக்கி கோழிக் கூண்டுக்குள் பரவலாக பரப்பிவைக்கும் பொழுது கோழிப் பேன்கள் இலை துண்டுகள் மீது வந்து சேர்ந்துவிடும். இந்த இலைகளை அவ்வப்போது அகற்றிவிட வேண்டும்.

2. பூண்டு, துளசி, வேப்பிலை, சீதாப்பழ இலைகள், மஞ்சள் ஒவ்வொன்றும் 10 கிராம் முதல் 20 கிராம் அளவுக்கு எடுத்துக் கொண்டு அவைகளை இடித்து அரைத்து 250 மி.லி வேப்பெண்ணெயில் காய்ச்ச வேண்டும். எண்ணெயை கோழிகளின் மேல் தோலில் பூச வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள முறையில் தயார் செய்யப்பட்ட மூலிகை தைல எண்ணெயினை 10–15 நோய் பாதித்த கோழிகளுக்கு பயன்படுத்தலாம்.

3. கோழிகளைப் பராமரிக்கும் கூண்டுகளையும், கோழிகளின் மீதும் தண்ணீரை பீச்சியடித்து பேன்களை வெளியேற்றலாம்.